விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சங்கு 27
ஒலி 197 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 20 சனிக்கிழமை (04.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# தமிழர்கள் எதிர்கொள்ளும் உரிமைப் பிரச்சினை தொடர்பாக

## தமிழ்த் தேசியப் பேரவை தமிழக முதல்வருடன் கலந்துரையாடல்




(சென்னை)

தமிழர்கள் எதிர்கொள்ளும் அரசியல் உரிமைப் பிரச்சினை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையினர் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜயுடன் கலந்துரையாடியுள்ளனர். (02 ஆம் பக்கம் பார்க்க)

## திருத்தப்பட்ட புதிய பேருந்து கட்டணம் வெளியீடு

(கொழும்பு)

வருடாந்தக் கட்டணத் திருத்தத்துக்கமைய புதிய பேருந்துக் கட்டண திருத்தத்தை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது. 02 ஆம் பக்கம் பார்க்க

## லிட்ரோ, லாஃப்ஸ் சமையல் எரிவாயு விலைகள் குறைப்பு

(கொழும்பு)

லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் சமையல் எரிவாயு விலைகள் நள்ளிரவு 15 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா முதல்வர் பதவி நீக்கம்

# ஆளுநரின் வர்த்தமானிக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை



(வவுனியா)

வவுனியா மாநகர முதல்வரைப் பதவி நீக்கிய வடக்கு மாகாண ஆளுநரின் வர்த்தமானிக்கு ஜூலை 15 ஆம் திகதி வரை வவுனியா மேல்நீதிமன்றத்தால் இடைக் காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (02 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு நெல் உலர்த்தும் இயந்திரங்கள்

(கொழும்பு)

நாள் ஒன்றுக்கு தலா 10 மெட்ரிக் தொன் வரையான நெல்லை 02 ஆம் பக்கம் பார்க்க

## வலி. வடக்கில் காணிகளை விடுவிக்கக் கோரிப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மயிலிட்டிப் பகுதியிலுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி காணி உரிமையாளர்களால் நேற்று அமைதியான முறையில் அறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 15 ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட கைதாகி பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவினால் நேற்று வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டு பின்னர் மாலை நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக் 15 ஆம் பக்கம் பார்க்க



## ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை மஹா கும்பாபிஷேகம்

தமிழகத்தில் இருந்து ஆதீனசுவாமிகள் பலர் வருகை



15 ஆம் பக்கம் பார்க்க

## 07 ஆம் திகதி பாராளுமன்றம் கூடுகிறது

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் ஜூலை 07 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை கூடவுள்ளது.

சபாநாயகர் மருத்துவர் ரிஸ்வி சாலி தலைமையில் கடந்த 15 ஆம் பக்கம் பார்க்க

## பலாலி வளலாய்க் கடலில் கரை ஒதுங்கிய அம்மன் சிலை



(யாழ்ப்பாணம்)

யாழ். பலாலி வளலாய்க் கடலில் அம்மனின் திருவுருவச் சிலை ஒன்று நேற்று முன்தினம் கரை ஒதுங்கியுள்ளது.

மிகவும் புராதனமாக காணப்படும் அம்மன் சிலை ஒன்றே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது.

எனினும் 15 ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நேர்மை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆளுநரின்...

ஆளுநரின் முடிவினை சவாலுக்கு உட்படுத்தி மனுதாரரான வவுனியா மாநகர சபை முதல்வர் சு.காண்டீபன் தொடுத்த வழக்கு நேற்று (03) வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு வழங்கப்பட்டது.

இது தொடர்பாக மனுதாரர் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாண ஆளுநர் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வவுனியா மாநகர முதல்வர் காண்டீபனின் பதவியை நீக்கி அறிவித்தார். அதற்கு எதிராக எழுத்தாணை மனு ஒன்று வவுனியா மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் (02) தாக்கல் செய்யப்பட்டு நேற்று (03) அது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதற்கான அறிவித்தல் பிரதிவாதிகளுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் பிரதிவாதிகள் நேற்று சமுகமளித்திருக்கவில்லை. இந்த மனுவிலே காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பாகவும் மனுதாரர் சார்பில் வெளியிடப்பட்ட சமர்ப்பணங்கள் தொடர்பாகவும் மன்று திருப்தியடைந்து எதிர் மனுதாரருக்கு அறிவித்தல் சேர்க்கும் படியான ஒரு கட்டளையை நியமித்திருக்கிறது.

அத்துடன் இந்த மனுவில் மூன்று இடைக்கால நிவாரணங்களையும் நாம் கோரியிருந்தோம். காண்டீபன் அவர்களை முதல்வர் பதவியிலும் அல்லது உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்குகின்ற குறித்த வர்த்தமானி பிரசுரத்தை இடைநிறுத்தும்படியாக நாம் கேட்டிருந்தோம். அது இடை நிறுத்தப்பட்டிருக்கின்றது. இரண்டாவது அந்த வர்த்தமானியின் அடிப்படையில் எதிர் மனுதாரர்கள் எந்த நடவடிக்கையினையும் எடுக்கக்கூடாது என்ற ஒரு தடை உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக காண்டீபனை பிரதியீடு செய்கின்ற வகையில் இன்னொரு முதல்வரைத் தெரிவு செய்வதற்கே, நியமிப்பதற்கோ அல்லது உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்கின்ற தடை உத்தரவையும் கோரியிருந்த நிலையில் அது வழங்கப்பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவுகள் தொடர்பாக வருகின்ற 15 ஆம் திகதி எதிர் மனுதாரர்கள் நீதிமன்றில் சமுகமாயிருந்து இதற்கான நிலைப்பாடுகளை தெரிவிக்கலாம். அதுவரை இந்த உத்தரவுகள் அமுலில் இருக்கும் என்றார்.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் சட்டத்தரணிகளான ஆர்.தயாபரன், கேசவன் சயந்தன் உள்ளிட்டோர் வழக்கை நெறிப்படுத்தியிருந்தனர். (ம-7,250)

## தமிழர்கள்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையினர் தமிழக முதலமைச்சர் சி.ஜோசப் விஜயை சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில், ஈழத்தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கும் அரசியல், மனித உரிமைகள் பிரச்சினைகள், ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை ஒழிக்கப்பட்டு தமிழர் தேசத்தின் இறைமையை அங்கீகரிக்கும் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வின் அவசியம், ஈழத்தமிழர் இனவழிப்புக்கு சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம், இந்திய - ஈழத்தமிழ்க் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணும் நடவடிக்கைகள், இந்தியாவில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது தமிழக முதலமைச்சரிடம் எழுத்துமூலமான கோரிக்கைக் கடிதமும் கையளிக்கப்பட்டது.

குறித்த சந்திப்பில், பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கனகரட்ணம் சுகாஷ், செல்வராசா கஜேந்திரன், பொன்னுத்துரை ஐங்கரநேசன், நடராஜர் காண்டீபன், கே. வி. தவராசா, தருமலிங்கம் சுரேஷ் ஆகிய தமிழ்த் தேசியப் பேரவையின் பிரதிநிதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,3[illegible])

## நெல் உலர்த்...

உலர்த்தும் திறன் கொண்ட, சுமார் 10 மில்லியன் ரூபா பெறுமதியான 50 நவீன தொழில்நுட்ப நெல் உலர்த்தும் இயந்திரங்களை நாடு பூராகவும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, மிகவும் சுறுசுறுப்பாகவும் ஸ்திரமான நிலையிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றத்திற்காக 500 மில்லியன் ரூபா பரவலாக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முறையான திட்ட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து, நெல் உலர்த்தும் இயந்திரங்கள் தேவைப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்மூலம் விவசாயிகள் தமது அறுவடைகளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்து அதிக விலையைப் பெற்றுக்கொள்ளவும், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களான விவசாயிகள் மிக எளிதாக இந்த உலர்த்தும் இயந்திரங்களைப் பயன்படுத்தி தமது அறுவடைகளை உலர்த்திக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும்.

கடந்த பெரும் போகத்தில் சாதனை அளவிலான நெல் அறுவடை கிடைத்திருந்த நிலையில், இந்த சிறு போகத்திலும் விவசாயிகள் பெருமளவில் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளதால் நாட்டில் எந்தவொரு அரிசித் தட்டுப்பாடும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான அனைத்துக் களஞ்சியசாலைகளையும் உடனடியாகத் திறந்து, சதொச மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து, இந்த சிறுபோக நெல் அறுவடையை விவசாயிகளிடமிருந்து நியாயமான விலைக்குக் கொள்வனவு செய்வதற்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் நெல் கொள்வனவுச் செயன்முறையை வலுப்படுத்துவதன் மூலம் சந்தையில் நியாயமான போட்டியை உருவாக்கி, நுகர்வோருக்குச் சலுகை விலையில் அரிசியை வழங்கவும், தனியார் துறையினரும் விவசாயிகளுக்கு நியாயமான விலையைச் செலுத்தும் நிலையை உருவாக்கவும் எதிர்பார்ப்பதாக வர்த்தக, வாணிப, உணவுப்பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.(ம-7)

## யோஷிதவின் மனு தள்ளுபடி

(கொழும்பு)

நிதி மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் தமக்கு எதிராக சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிலுள்ள "சதி" என்ற குற்றச்சாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோஷித ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட சீராய்வு மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (03) நிராகரித்துள்ளது. (ம-7)

## புதிய...

இதற்கமைய ஆரம்பக் கட்டணம் 34 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் புதிய கட்டணத் திருத்தம் எதிர்வரும் திங்கட்கிழமை (6) முதல் அமுலுக்கு வரும்.

திருத்தப்பட்ட புதிய கட்டணத் திருத்தத்துக்கமைய, 100 கிலோமீற்றருக்கும் குறைவான தூரப் பாதைகளில் இயக்கப்படும் சாதாரண பேருந்து சேவைகளுக்கான கட்டணம் 12 சதவீதம் அதிகரிக்கப்படும்.

100 கிலோமீற்றர் மற்றும் அதற்கு மேற்பட்ட தூரப் பாதைகளில் இயக்கப்படும் சாதாரண பேருந்து சேவைகளுக்கான கட்டண அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டு, 20 சதவீதம் கட்டண அதிகரிப்புக்கு உள்ளாக்கப்படும்.

100 கிலோமீற்றருக்கும் குறைவான தூரப் பாதைகளில் இயக்கப்படும் சொகுசு பேருந்து சேவைகளுக்கான கட்டணமும் 12 சதவீதம் அதிகரிக்கப்படும்.100 கிலோமீற்றர் மற்றும் அதற்கு மேற்பட்ட தூரப் பாதைகளில் இயக்கப்படும் சொகுசு பேருந்து சேவைகளுக்கான கட்டண அமைப்பில் திருத்தங்கள் செய்யப்பட்டு, 15 சதவீதம் கட்டண அதிகரிப்புக்கு உள்ளாக்கப்படும்.

அரை சொகுசு பேருந்து கட்டணங்கள் தொடர்பான வழக்கு தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், அரை சொகுசு சேவைகளுக்கான கட்டணங்கள் திருத்தப்பட்ட சாதாரண பேருந்து கட்டணத்தைப்போல் 1.5 மடங்கு என்ற அடிப்படையில் தொடர்ந்து கணக்கிடப்படும்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் இயக்கப்படும் அதி-சொகுசு பேருந்து சேவைகள் மற்றும் சாதாரண நெடுஞ்சாலை பேருந்து சேவைகள் ஆகியவை திருத்தப்பட்ட சொகுசு பேருந்து கட்டண அமைப்பிற்கு இணங்க கட்டணங்களை அறவிட முடியும் என்றும் ஆணைக்குழு மேலும் அறிவித்துள்ளது. (ம-7)


காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு
கிழக்குப் பகுதியில் 10 பரப்பு
காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- பலாலி பிரதான வீதியில் இருந்து 150m தூரத்தில் உள்ளது.
- 18 அடிப் பாதையுடன்.
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ஒரு பரப்பின் விலை 55 இலட்சம் ரூபாய்.
- பார்வையிடும் நேரம் :
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

(7980)

தொடர்புகளுக்கு : ஜெயம்

077 814 7389, 077 986 5457

Jeyam.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாடசாலை நேரங்களில் கனரக வாகனங்களுக்கு தடை

## மீறியவர்களை தடுத்து நிறுத்திய பொலிஸார்

**(யாழ்ப்பாணம்)**

**பாடசாலைகள் ஆரம்பித்தல் மற்றும் நிறைவுறும் நேரத்தில் கனரக வாகனங்களுக்கு கட்டுப்பாடு விதித்திருந்த நிலையில் போக்குவரத்தில் ஈடுபட்ட டிப்பர்கள் நேற்றைய தினம் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது.**

கிளிநொச்சி ஏ9 வீதி இரணைமடு சந்தி தொடக்கம் பரந்தன் சந்தி வரையான பகுதியில் டிப்பர் வாகனம் உட்பட கனரக வாகன போக்குவரத்துக்கு கட்டுப்பாடு விதிப்பது என கடந்த 30 ஆம் திகதி மாவட்டச் செயலக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக, நேற்று வெள்ளிக்கிழமை (3) கிளிநொச்சி நகர்ப்பகுதியில் டிப்பர் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு பொலிஸாரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் வீதி விபத்துக்களை தடுத்தல் மற்றும் எதிர்கால சந்ததியினரை நல்வழிப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடலின்போது பாடசாலைகள் ஆரம்பித்தல் மற்றும் நிறைவுறும் நேரத்தை கருத்தில் கொண்டு, மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரைக்கும் பின்னர் பகல் 1 மணி தொடக்கம் 2 மணி வரைக்கும் இரணைமடு சந்தி மற்றும் பரந்தன் சந்திக்கு இடைப்பட்ட பகுதியில் ஏ9 வீதியில் டிப்பர் வாகனம் உட்பட கனரக வாகனங்கள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருந்தது.

இதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாக கிளிநொச்சி பிராந்தியத்திற்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் புத்திக குணசேகர தெரிவித்திருந்தார்.

இதற்கு அமைய நேற்றைய தினம் ரிப்பர் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு சாரதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. (3)

# 2027 நிதியாண்டுக்கான பாதீடு மதிப்பீட்டு பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

2027ஆம் நிதியாண்டுக்கான பாதீடு மதிப்பீடுகளைத் தயாரிக்கும் பணிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த பணிகள் 02/2026 இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக நிதி அமைச்சு வெளியிட்டுள்ள முக்கிய விபரங்களாக, கட்டாய செலவுக் குறைப்பு நடவடிக்கைகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள செலவு எல்லைகளை அனைத்து அமைச்சுக்களும் அரச நிறுவனங்களும் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான முன்மொழிவுகள் அனைத்தும் பூர்வாங்க பாதீட்டு மதிப்பீடுகளுக்குள்ளேயே சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் அது சார்ந்த தரவுகளைச் சமர்ப்பிப்பதற்கு "ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையை" பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரச நிறுவனங்களும் தங்களது பாதீட்டு மதிப்பீடுகளை இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டு திணைக்களத் திடம் சமர்ப்பிக்க வேண்டும் என நிதி அமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (நி)

# முதியோர் இல்லங்களை பதிவு செய்ய செப்டெம்பர் வரை காலக்கெடு



(கொழும்பு)

நாட்டிலுள்ள பதிவு செய்யப்படாத அனைத்து முதியோர் இல்லங்களும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் கட்டாயம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் கே. சதுர மிஹிதும் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள தகவலில்,பதிவு செய்யப்படாத முதியோர் இல்லங்கள் குறித்த தகவல்களைச் சேகரிப்பதற்காக தற்போது நாடளாவிய ரீதியில் விசேட கணக்கெடுப்பு ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதுவரை தங்களது விபரங்களை வழங்காத முதியோர் இல்லங்களின் நடத்துனர்கள், செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள கூகுள் படிவத்தைப் பூர்த்திசெய்து விபரங்களை உடனடியாக வழங்க வேண்டும்.

அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ள விசேட திட்டங்களின் பலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த முதியோர் இல்லங்களின் பதிவு இன்றியமையாததாகும்.நாடு முழுவதும் பதிவு செய்யப்படாமல் இயங்கிவரும் 311 முதியோர் இல்லங்கள் தற்போது அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தற்போது முறையான பதிவின்றி இயங்கும் ஐந்துக்கும் மேற்பட்ட முதியோர்களைப் பராமரிக்கும் நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பணிப்பாளர் எச்சரித்துள்ளார். (நி)


**Recovery Officer Vacancy**
அறவீட்டு அலுவலர்
வடக்கு, கிழக்கு & நாடு பூராவும்
முழுநேரம் / பகுதி நேரம்
ஆண் / பெண்
N & G Ads
- வயது - 25-55
- க.பொ.த. சா / தரம்
- மோட்டார் சைக்கிள் இருக்க வேண்டும்
074 375 2682
074 033 9568
074 253 7694
மாத வருமானம் LKR 100,000+
(செயற்பாட்டின் அடிப்படையில்)



1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10 -- 05 -- 1938
மறைவு 15 -- 07 -- 2025

அமரர். தம்பிப்பிள்ளை மனிசுந்தரம்
(ஓய்வு நிலை அதிபர்)

ஆணிவேராய் அடியிலிருந்து
இன்ப நிழலின் விருட்சமாகி
தன்னலமின்றி விழுதுபரப்பி
தரணியில் நல்ல தந்தையாகி
உவகை பல செய்து
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து
இறைவன் திருவடியில்
இளைப்பாறும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விளையாட்டுச் செய்திகள்

## உலக கிண்ண ரி-20 தொடர்

# இங்கிலாந்து மகளிர் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்




லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற மகளிருக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், தென்னாபிரிக்க மகளிர் அணியை 40 ஓட்டங்களால் வீழ்த்தி இங்கிலாந்து மகளிர் அணி வெற்றி பெற்றுள்ளது.

குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து மகளிர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.


இங்கிலாந்து அணி சார்பாக அதிகப்படியாக, ஆலிஸ் கேப்சி 47 பந்துகளுக்கு 75 ஓட்டங்களையும், ஹீதர் நைட் 47 பந்துகளுக்கு 58 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து 170 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க மகளிர் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களை மாத்திரமே பெற்று போட்டியில் தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்க அணி சார்பில், டாஸ்மின் பிரிட்ஸ் 45 பந்துகளுக்கு 51 ஓட்டங்களையும், அணித் தலைவர் லாரா வோல்வார்ட் 15 பந்துகளுக்கு 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அதன்படி குறித்த போட்டியில், 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து மகளிர் அணி வெற்றி பெற்றதுடன் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை எதிர்த்து மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## இஸ்ரேலிய படையினரின் தாக்குதலில் பாலஸ்தீன கால்பந்து வீரர் உயிரிழப்பு



பாலஸ்தீன கால்பந்து அணியின் இளம் கோல் காப்பாளரான 32 வயதுடைய சலீம் அல் அஷ்கர் காசாவில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

தெற்கு காஸா பகுதியில் உள்ள கான் யூனிஸ் நகரின் வடகிழக்கே அமைந்துள்ள அல்கராலா என்ற நகரத்தில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலின் போதே சலீம் அல் அஷ்கர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இளம் வயதிலேயே திறமையான கோல் காப்பாளராக முத்திரை பதித்த அவருக்கு, கடந்த 5 மாதங்களுக்கு முன்புதான் திருமணம் நடந்தது.

சலீம் அல் அஷ்கரின் மரணத்தை அடுத்து பாலஸ்தீன கால்பந்து சங்கம் அதிகாரப்பூர்வ புள்ளி விபரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.


அதில், கடந்த 2023 ஒக்டோபர் மாதம் காசாவில் போர் தொடங்கியதில் இருந்து, இஸ்ரேலிய படைகளின் தொடர் தாக்குதல்களால் இதுவரை 1,000 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீன விளையாட்டு வீரர்கள் மற்றும் தடகளப் பயிற்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்ற தகவலை கால்பந்து சங்கம் வெளியிட்டுள்ளது. (3)




சுடர்ஒளி பிறீமியர் லீக் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டிக்கான வெற்றிக் கிண்ணமும் சீருடை அறிமுக நிகழ்வும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ் பீச் ரெஸ்ரோரன்ஸ் மண்டபத்தில் ஏற்பாட்டுக் குழு தலைவர் வைத்திய கலாநிதி வே.கமலநாதன் தலைமையில் நடைபெற்றது. (படம்: கனகராஜ்)

## பரபரப்பான ஆட்டம்

# குரோசியாவை வெளியேற்றி போர்த்துக்கல் அபாரம்



2026 கால்பந்து சம்பியன்ஷிப் தொடரின் 32 ஆவது சுற்றில் குரோசிய அணிக்கு எதிரான போட்டியில், 2-1 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் போர்த்துக்கல் அணி அடுத்த சுற்றான 16 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளதுடன், அங்கு பலம் வாய்ந்த ஸ்பெயின் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

போர்த்துக்கல் - குரோசியா அணிகளுக்கு இடையிலான 32 ஆவது சுற்று ஆட்டம் கனடாவின் டொரன்டோவில் நடைபெற்றது.

விறுவிறுப்பாகத் தொடங்கிய இந்தப் போட்டியில் இரண்டு அணிகளும் கடுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தின. இந்த நிலையில் ஆட்டத்தின் 53ஆவது நிமிடத்தில் குரோசியா அணியினர் தமது முதல் கோலைப் பதிவு செய்தனர்.

இதனையடுத்து போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் ரொனால்டோ 68 ஆவது நிமிடத்தில் பெனால்டி முறையில் கோல் ஒன்றை தமது அணிக்காக பெற்றுக்கொடுத்தார்.

94 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணி தமது இரண்டாவது கோலைப் பெற்றது. இதன் படி, ஏற்கனவே ஒஸ்திரியாவை 3-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ள பலம் வாய்ந்த ஸ்பெயின் அணியை 16 ஆவது சுற்றில் போர்த்துக்கல் அணி எதிர்த்தாடவுள்ளது. (3)

## உலக கிண்ண கால்பந்து

# அல்ஜீரியாவை வீழ்த்தி சுவிட்சர்லாந்து அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

கனடாவின் வான்கூவரில் வியாழக்கிழமை நடைபெற்ற கால்பந்து சம்பியன்ஷிப் தொடரின் 32 ஆவது சுற்றில் சுவிட்சர்லாந்து அணி அல்ஜீரியாவை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

போட்டியின் 10 ஆவது நிமிடத்தில் எம்போலோ சுவிட்சர்லாந்திற்கு முன்னிலையை பெற்றுத் தர, இரண்டாவது பாதி தொடங்கிய ஒரு நிமிடத்திலேயே டான் என்டோய் அந்த முன்னிலையை இரட்டிப்பாக்கினார்.

முதல் சுற்றில் இரண்டு வெற்றிகள் மற்றும் ஒரு சமநிலையுடன் குழு 'பி' பிரிவில் முதலிடம் பிடித்திருந்த சுவிட்சர்லாந்து, இந்த முடிவின் மூலம் இத்தொடரில் தனது தோல்வியடையாத நிலையைத் தக்க வைத்துக் கொண்டது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வண்ணான் கேணி வடக்கில் காணியின்றி தவிக்கும் குடும்பங்கள்

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



**(கிளிநொச்சி)**

**கிளிநொச்சி மாவட்டம், வண்ணான்கேணி வடக்கு கிராமத்தில் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்கென சொந்தமாகக் குடியிருப்பு நிலம் இல்லாத காரணத்தினால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக வண்ணான்கேணி வடக்கு கிராமமக்கள் ஒன்றிணைந்து, கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான க.இளங்குமரனுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அக்கடிதத்தில் கிராம மக்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

"எமது கிராமத்தில் வாழ்ந்து வரும் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிப்பதற்கு சொந்தக் காணி இல்லாத நிலையில், அன்றாட வாழ்க்கையில் பல்வேறு அசௌகரியங்களையும், நெருக்கடிகளையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்படியான சூழ்நிலையில், எமது கிராமத்தின் பின்புறமாக அமைந்துள்ள அரசின் ஒதுக்கீட்டுக் காப்புக் காணிகளை, பிரதேச செயலகத்தின் ஊடாக பொதுப் பயன்பாட்டுக்காக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

எனவே, முதற்கட்டமாக காணியற்ற நிலையில் தவித்து வரும் ஏழை குடும்பங்களுக்கு அக் காணிகளைப் பகிர்ந்தளித்து, அவர்களுக்கான போக்குவரத்து, வீதி வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்."

தங்களின் இந்த அத்தியாவசியத் தேவையையும், வாழ்வாதாரப் பிரச்சினையையும் கருத்தில் கொண்டு, உரிய அதிகாரிகள் மூலம் தமக்கு சாதகமான பதிலைப் பெற்றுத் தருமாறு வண்ணான்கேணி வடக்கு கிராம மக்கள் மிகப் பணிவுடன் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-315-316)

# எல். நினோ காலநிலை தொடர்பில் கிளிநொச்சி விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தல்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கமக்காரர் அமைப்பு மற்றும் மீனவசங்கங்களின் பிரதிநிதிகளுக்கு எல் நினோ காலநிலை தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு ஏற்படப்போகும் எல்நினோ நிலையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி நாகமுத்து பிரதீபராஜா விளக்கமளித்திருந்தார்.



அத்துடன் குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ் முரளிதரன்,மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் கே.அழகக்கோன், கமக்காரர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (3-316)

# முச்சக்கரவண்டி தரிப்பிடத்திற்கு தகர கொட்டகை

## பருத்தித்துறை நகரசபையால் முன்னெடுப்பு



(கரணவாய்)

வடமராட்சி பருத்தித்துறை நகர சபையினரால் நவீன சந்தை தொகுதியிலுள்ள வாடகை முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கு தகரத்திலான கொட்டகை ஒன்று அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சியின் உறுப்பினர் ஜெயானந்தம் ஜெயகோபியினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையை அடுத்து குறித்த முச்சக்கர வண்டி தரிப்பிடத்திற்கான கொட்டகை நகரசபையால் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.


இதேவேளை பருத்தித்துறை நவீன சந்தைத் தொகுதியில் பொலிசார் கடமையை மேற்கொள்வதற்கெனவும் நகர சபையால் தனியான அறை ஒன்றும் ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-60)

# வவுனியா மாநகர சபையின் செங்கோல் மீட்பு

(வவுனியா)

வவுனியா மாநகர சபையின் செங்கோல், பதக்கம் மற்றும் முதல்வர் ஆடை என்பன காணாமல் போனதாக சபையின் செயலாளரால் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய் கிழமை முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பிரதான பரிசோதகர் ஆனந்த விஜேயசேகர தலைமையில் விசாரணை முன்னெடுத்த வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொலிஸார், வவுனியா, ஓயார் சின்னக் குளம் பகுதியில் இருந்து வவுனியா மாநகர சபைக் குரிய செங்கோலை மீட்டனர்.



முன்னாள் மேயரின் நண்பர் ஒருவர் அங்கு கொண்டு சென்று செங்கோலை வழங்கியுள்ள தாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அங்கு கைப்பற்றப்பட்ட செங்கோல் வவுனியா நீதிமன்றில் நேற்று முன்தினம் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த செங்கோலை வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் ஒப்படைக்குமாறு மன்றினால் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த செங்கோல் உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் மேயர் மற்றும் பெண் ஒருவர் உட்பட 4 நபர்களையும் கைது செய்ய நீதிமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார. (3-250)

# நெடுந்தீவில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதான வீதி புனரமைப்பு பணியினை ஆரம்பித்தல் மற்றும் நெடுந்தீவு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வு என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளதாக நெடுந்தீவு பிரதேச செயலாளர் ந.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவின் முக்கியமான, நீண்ட கால எதிர்பார்ப்பாக இருந்த இரண்டு விடயங்களும் ஒரேநாளில் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரும், பாராளுமன்ற சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கும் வகையில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமையவுள்ளதுடன் இதற்கான ஒப்பந்தம் கடந்த வருடம் குறிகட்டுவானில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து கைச் சாத்திட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46 ஆயிரம் சிறுவர்கள் வன்முறைக்குள்ளாகியுள்ளனர்

# நீதியை நிலை நாட்ட அரசு களமிறங்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

**நாட்டில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள நிலையில், வன்முறைகளால் பாதிக்கப்பட்ட 46,000 சிறுவர்களுக்கான நீதியை நிலைநாட்ட அரசாங்கம் உடனடியாக களமிறங்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.**

தேசிய சிறுவர் பாதுகாப்பு வழிகாட்டல் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் காட்டும் தாமதம், எதிர்கால தலைமுறைக்கு இழைக்கப்படும் துரோகம் என்றும் அவர் சாடியுள்ளார்.


கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இன்று நமது நாட்டில் சிறுவர் வன்முறைகளுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளான 46,000 பேர், சட்ட ரீதியாக தங்களுக்கு நீதி கிடைக்கும் என நம்பிக்கையுடன் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு துஷ்பிரயோகம், வன்முறை மற்றும் அநீதிகளுக்கு ஆளான சிறுவர்களுக்கு, அவர்களது சிறுவர் பருவத்திலேயே அதற்குரிய நீதி கிடைக்கவில்லை என பல அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்த 46,000 பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதியை நிலைநாட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில் ஏன் இத்தனை தாமதம் ஏற்படுகிறது என்ற கேள்வி எழுந்துள்ளது. ஆகவே, இந்த முறைப்பாடுகளை விசாரணை செய்வதைத் தாமதிக்காமல், துஷ்பிரயோகம், வன்முறை



மற்றும் இன்னல்களுக்கு ஆளான சிறுவர்களுக்காக உரிய நீதியை நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசாங்கம் சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்புப் பற்றி மேடைகளில் உயர்வாகப் பேசுவதோடு நிறுத்திக் கொள்ளாமல், அந்தப் பேச்சுக்களைச் செயலில் காட்ட வேண்டும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு வழிகாட்டல் கொள்கையை இந்த வருடத்திலேயே நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்க்கட்சி தனது பூரண ஆதரவைத் தரும். தேங்கிக் கிடக்கும் 46,000 முறைப்பாடுகளை உடனடியாக விசாரணை செய்து நீதியை நிலைநாட்டுங்கள்.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் தெளிவான முறையான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

இதனை ஒரு அரசியல் பிரச்சினையாகப் பார்க்காமல், நாட்டின் எதிர்கால சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3375

துசாரன்




மதுமதி




சுஜி




வர்ஷனா




கவின்




யதுஷா





நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசின் மீது அபாண்டமாக பழி சுமத்துவதை நிறுத்துவோம்

## வாசுதேவ நாணயக்கார வலியுறுத்து



(கொழும்பு)

சுயநல நோக்கோடு அரசின் மீது அபாண்டமான தாக்குதல்களை நடத்துவதை விடுத்து, அரசு இன்று எதிர் நோக்கும் இக்கட்டான சூழ்நிலையை ஓரளவுக்கு மனிதாபிமானத்துடனும் அனுதாபத்துடனும் அணுகிப் பேச வேண்டும் என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அத்துடன் தற்போதைய அரசு சர்வதேச நிதி நெருக்கடிகள், இயற்கைப் பேரிடர்கள் மற்றும் நுகர்வோர் நலன் சார்ந்த கொள்கைகள் காரணமாகப் பாரிய சவால்களை எதிர்நோக்கியுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் காரணமாக அரசு ஒருபுறம் கடுமையான நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது.

இந்த ஒப்பந்தமானது தற்போதைய அரசால் ஏற்படுத்தப்பட்ட தொன்றல்ல. இது கடந்த கால அரசால் உருவாக்கப்பட்டு தற்போதைய அரசின் தலையில் சுமத்தப்பட்ட ஒரு சிக்கலான நிலை. இதே வேளை, அரசு எதிர்பாராத வேறு சில சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட "டித்வா" சூறாவளி காரணமாகப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, அரசுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் மேலதிகமாக 500 பில்லியன் ரூபாவைச் செலவினமாகச் சேர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான தொடர் சவால்களுக்கு மத்தியிலும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை ஓரளவுக்கு நியாயமான மட்டத்தில் பேணுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. உற்பத்தியாளர்களை விட, நாட்டின் பெரும்பான்மையான மக்களாக விளங்கும் நுகர்வோரின் நலன் குறித்து அரசு அதிகமாகச் சிந்திப்பதனாலேயே இது சாத்தியமாகியுள்ளது. அரசின் இந்த நுகர்வோர் சார்பு அணுகுமுறை பாராட்டுக்குரியது.

எனினும், உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் குறித்து அரசு போதிய கவனம் செலுத்தவில்லை.

நுகர்வோருக்கு வழங்கும் முக்கியத்துவத்தை உற்பத்தியாளர்களுக்கும் வழங்கத் தவறியமைக்காக அரசு மீது நியாயமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டி விமர்சிக்க வேண்டியது அவசியம் என்றாலும், அதேநேரம் அரசு தற்போது எதிர்நோக்கும் பிரம்மாண்டமான சவால்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (நி)

# மருத்துவ சேவையை மேம்படுத்த 2,652 புதிய நியமனங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவின் அறிவுறுத்தலின் பேரில் சுகாதாரப் பணி உதவியாளர்கள், அரச சுகாதார முகாமைத்துவ உதவியாளர்கள், கள நுளம்பு ஒழிப்பு உதவியாளர்கள் மற்றும் சிற்றூழியக் கட்டுப்பாட்டாளர்கள் உள்ளிட்ட 2,652 பேருக்கு அடுத்த மாதத்திற்குள் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் இலவச சுகாதார சேவை அமைப்பின் தரத்தை மேம்படுத்துதல், வைத்தியசாலைக் கட்டமைப்பை மேலும் திறம்படச் செய்தல் மற்றும் வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் நோயாளி பராமரிப்பு சேவைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்லுதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையிலேயே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நீண்ட காலத்திற்குப் பின்னர் சுகாதாரப் பணி உதவியாளர்கள் உள்ளிட்ட பல துறைகளில் நிலவும் வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மேல் மாகாணத்தில் முதற்கட்ட சுகாதாரப் பணி உதவியாளர்களாக 627 பேருக்கு இன்று நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

சுகாதாரப் பணி உதவியாளர் நியமனங்களை பல கட்டங்களின் கீழ் வழங்குவதற்கு சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (நி)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 79/7, நெல்லியான் வீதி, வட்டாரம்-05

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 05, நெல்லியான் வீதியிலுள்ள இல.79/7 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **A.வைத்திலிங்கம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனமானது வயித்திலிங்கம் கனகசபாபதி ஆகியவர் தனது பிதா மாதாவாகிய அம்பலவாணர் வயித்திலிங்கத்திற்கும் பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் சொந்தமாய் இருந்து, அவர்கள் இறக்க, அவர்களின் உரிமைக்காரர்களாகிய தானும், தனது சகோதரர்களும் குறித்த ஆதனத்தை அன்றிலிருந்து முப்பது வருடங்களாக தங்கு தடையற்றதும், எவருக்கும் மாறானதும், சுயாதீனமானதுமாக ஆட்சி செய்து கொண்டு வருவதாகவும், அதன் பிரகாரம் ஆட்சியுரிமைச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின்படி ஆட்சியுரிமை பெற்றுவிட்டதாகவும் வெளிப்படுத்தி, பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் 6567/07.02.2002ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

**செல்லன் இராசேந்திரமும் பெண் உசாநந்தினியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6954/14.01.2003 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வயித்திலிங்கம் கனகசபாபதி** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**இ.சுதாகரனும் பெண் யகிதாமதியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு ப.யோ.அன்ரனி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 68/02.02.2011 ஆம் இலக்க உறுதியால் குறித்த **செல்லன் இராசேந்திரமும் பெண் உஷாநந்தினியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"பெரியபுலோ"**
இறை: **சுழிபுரம் மேற்கு**
விஸ்தீரணம்: **நில.பர.இலா 01**
எல்லைகள்: **கிழக்கு**-ஒழுங்கை, **வடக்கு**- செல்லன் இராசேந்திரமும் பெண் உஷாநந்தினியினதும் ஆதனம், **மேற்கு**-செல்லையா செல்வராசாவுக்குரிய ஆதனம், **தெற்கு**- நல்லான் சிவலிங்கம் பெண் இராசமணிக்குமுரிய ஆதனம்

குறித்த **இ. சுதாகரனும் பெண் யகிதாமதியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **இ. சுதாகரனும் பெண் யகிதாமதியும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**


# சாவகச்சேரி சமுர்த்தி சமுதாய வங்கிக்கு காணி ஒதுக்கீடு

## தவிசாளர் ஸ்ரீ பிரகாஸ் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சமுர்த்தி சமுதாய வங்கிக்கு பொருத்தமான இடத்தில் காணி ஒதுக்கீடு செய்திருப்பதாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் மேற்பட்டி தனங்களப்பு வீதியில் அமைந்திருக்கின்ற காணியின் பொருத்தமான ஒரு பகுதியை வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருடைய முயற்சியில் இந்த காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சபையும் அதற்கு ஏகமனதாக தீர்மானித்திருக்கின்றது.

இதன் ஊடாக சுமார் 15 வருட காலமாக நிலவி வந்த சமுர்த்தி சமுதாய வங்கிக்கான காணி ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்திருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் சகல இடங்களிலும் சமுர்த்தி சமுதாய வங்கியானது சொந்த நிலம் மற்றும் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகின்ற நிலையில் சாவகச்சேரியில் மாத்திரம் அது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. தற்பொழுது அந்தக் குறைபாடும் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றது என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (3-30)

# நாட்டில் தீவிரமடையும் டெங்கு பரவல்

(கொழும்பு)

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு பருவமழை காரணமாக மே, ஜூன், ஜூலை மாதங்களில் டெங்கு பரவல் அதிகரிக்கும் என ஏற்கனவே கணிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு 600 ஆக இருந்த தினசரி நோயாளர்களின் எண்ணிக்கை, தற்போது 1,000 ஐத் தாண்டியுள்ளது.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நான்கு மடங்கு அதிகமாகும். இந்த ஆண்டில் இதுவரை 56,426 நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இதில் ஜூன் மாதத்தில் மட்டும் 22,000 நோயாளிகளும், மே மாதத்தில் 8,500 நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுவரை 35 மரணங்கள் பதிவாகியுள்ளதாக மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

பதிவான நோயாளர்களில் சுமார் 50 சதவீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

தற்போது நாடு முழுவதும் 124 சுகாதார மருத்துவ அதிகாரி (MOH) பிரிவுகள் அதிக அபாயப் பகுதிகளாக அடையாளம் காண ப்பட்டுள்ளன.

டெங்கு தொற்றில் நான்கு வகைகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றில் மிக மோசமான டெங்கு பரவல் 2017 இல் ஏற்பட்டதுடன், அது டெங்கு தொற்றின் "இரண்டாம் வகை" ஆகும்.

2022 ஆம் ஆண்டிலும், தற்போதைய சூழலிலும் இந்த இரண்டாம் வகை தொற்றே அதிகரித்து காணப்படுகிறது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்



## குடும்பத்தினருடன் இங்கிலாந்து செல்கிறார் இளவரசர் ஹரி

(லண்டன்)

தான் பிறந்து வளர்ந்த நாட்டைத் தனது குழந்தைகளுக்குக் காண்பிக்கும் நோக்குடன் இளவரசர் ஹரி அடுத்த வாரம் பிரிட்டனுக்குத் திரும்பவுள்ளார்.

அதன்படி, மன்னர் சார்லஸின் இளைய மகனான ஹரி, தனது மனைவி மேகன் மற்றும் குழந்தைகளுடன் அடுத்த வாரம் செவ்வாய்க்கிழமை இங்கிலாந்தை வந்தடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரச குடும்பத்தின் செயற்பாட்டு உறுப்பினர்கள் என்ற நிலையிலிருந்து விலகிய ஹரி, 2020 ஆம் ஆண்டு முதல் தனது மனைவியான மேகனுடன் அமெரிக்காவில் வசித்து வருகிறார்.

அவரது குழந்தைகளான 7 வயதுடைய ஆர்ச்சி மற்றும் 5 வயதுடைய லில்லிபெட் ஆகியோர் இறுதியாக நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டனுக்குச் சென்றிருந்தனர்.

தான் மிகவும் நேசிக்கும் அந்த நாட்டிற்குத் தனது குழந்தைகளை அழைத்துச் செல்ல வேண்டும் என்ற தனது விருப்பத்தை ஹரி முன்பே வெளிப்படுத்தியிருந்தார்.

எனினும் அவர் பிரிட்டன் வழங்கும் காவல்துறைப் பாதுகாப்பு ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை என்ற காரணத்தால் கடந்த காலங்களில் தனது குழந்தைகளை அங்கு அழைத்து வர முடியவில்லை என்று முன்பு கூறியிருந்தார். (நி)

# விதிகளை மீறினால் கடு

# சரக்கு கப்பல்களுக்கு



(டெஹ்ர
“ஹார்மு
செல்லு
களும்
களை
டும். த
கையை
என்று ஈ

அமெரிக்கா - ஈரான் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமுலில் இருந்து வருகிறது.

இதனால், நீண்ட நாட்களுக்குப் பிறகு, எந்தவித பாதுகாப்பு அச்சமும் இன்றி, சரக்குக் கப்பல்கள் முக்கிய நீர்வழிப்பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து வருகின்றன.

இந்த சூழலில், வாக்குறுதியை மீறிவிட்டதாக பரஸ்பரம் குற்றம்சாட்டி இரு தரப்பினரும் மீண்டும் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், ஹார்முஸ் ஜலசந்தியில் மீண்டும் கட் டுப்பாடுகளை ஈரான் விதித் துள்ளது.

இந்த நிலையில், அமெ ரிக்காவுடன் அமைதிப் பேச்சு வார்த்தை நடந்து வரும்

## உக்ரைன் மீது ரஷ்யா கொடூர தாக்குதல் 30 பேர் உயிரிழப்பு



(கீவ்)

உக்ரைனின் தலைநகரான கீவ் மீது நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலையில் ரஷ்யா நூற்றுக்கணக்கான ட்ரோன்கள் மற்றும் டஜன் கணக்கான ஏவுகணைகளை ஏவித் தாக்குதல் நடத்தியது.

இந்த ஆண்டில் தலைநகர் மீது நடத்தப்பட்ட மிகக் கொடிய தாக்குதலான இதில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்ததுடன், சுமார் 130 கட்டடங்கள் சேதமடைந்தன.


வியாழன் இரவு முழுவதும் தலைநகர் கீவ் நகரின் மையப்பகுதியைத் தொடர் வெடிப்புகள் உலுக்கின.

ஆயிரக்கணக்கான மக்கள் குண்டுத் தடுப்பு அறைகளுக்கும் நிலத்தடி மெட்ரோ நிலையங்க்ளுக்கும் விரைந்து சென்றனர். வானம் முழுவதும் அடர்த்தியான புகை மண்டலம் சூழ்ந்திருந்தது.

இடிபாடுகளுக்குள் இருந்து மேலும் மூன்று உடல்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளதாக உக்ரைனின் அவசரச் சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

## இடிபாடுகளுக்குள் சிக்கியவர்

## எட்டு நாட்களுக்குப் பின் மீட்பு



(கராக்கஸ்)

வெனிசுலாவில் ஏற்பட்ட இரட்டை நிலநடுக்கங்களால் இடிந்து விழுந்த கட்டடத்தின் இடிபாடுகளுக்குள் எட்டு நாட்களாகச் சிக்கியிருந்த ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

140 தொன் இடிபாடுகளுக்கு அடியில் ஹெர்னான் கில் எனபவரை கண்டறிந்த பின்னர், அவசரகாலப் பணியாளர்கள் 100 மணி நேரத்திற்கும் மேலாகப் போராடி அவரை மீட்டனர்.

கடந்த ஜூன் 24 அன்று வெனிசுலாவை நிலநடுக்கம் தாக்கியதிலிருந்து நேற்று முன்தினம் வியா ழக்கிழமை மாலை வரை 2,595 பேர் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதுடன் பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## டெஹ்
## ஈரான



(டெஹ்ரான்)

அமெரிக்க - இ
கூட்டுத் தாக்குதல்
லப்பட்ட ஈரானின் உ
வர் அலி கமேனியி
அவரது இறுதிச்
முன்னதாக நேற்
ரானில் உள்ள
மொசல்லாவுக்கு
வரப்பட்டதாக அந் ந
ஊடகங்கள் செய்
யிட்டுள்ளன.

பெப்ரவரி 28
ஈரான் மீதான அ
இஸ்ரேலியப்
ஆரம்ப கட்டத்
களில் கமேனி
பட்டிருந்தார். இ
கிழமை நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெளிநாடு

## ...டும் நடவடிக்கை
## ... ஈரான் மிரட்டல்

(...ஹ்ரான்)

...ர்முஸ் ஜலசந்தி வழியாகச் ...லும் அனைத்து சரக்கு கப்பல் ... அனுமதித்த வழித்தடங் ... மட்டுமே பயன்படுத்த வேண் ... தவறினால் கடும் நடவடிக் ...ய எதிர்கொள்ள நேரிடும்," ... ஈரான் எச்சரித்துள்ளது.

...முஸ் ... கட் ...ிதித் ...அமெ ...பச்சு ...ரும் வேளையில், ஹார்முஸ் ஜல சந்தி வழியாகச் செல் லும் அனைத்து எண்ணெய் கப்பல்களும் ஈரான் அனு மதித்த வழித்தடங்களை மட்டுமே பயன்படுத்த வேண் டும் என்றும், தவறினால் கடும் நடவடிக்கையை எதிர் கொள்ள நேரிடும் என்றும் ஈரானின் கூட்டு ராணுவக் கட்டளைப் பிரிவு எச்சரித் துள்ளது. இது சர்வதேச அளவில் மீண்டும் பதற் றத்தை அதிகரித்துள்ளது. (நி)

## சொகுசு கப்பலில் பரவிய நோரோ வைரஸ்
### 125 பேர் பாதிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புளோ ரிடா மாகாணத்தில் இருந்து கரீபியன் தீவுகளை நோக்கி "ரூபி பிரின்சஸ்" என்ற பிரமாண்ட சொகுசு கப்பல் ஒன்று ஆயிரக்கணக்கான பயணியருடன் கடந்த மே மாதம் உற்சாகமாக புறப்பட் டது. பயணம் பாதியைக் கடந்த நிலையில், திடீரென சிலருக்கு கடுமையான வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டது.

முதலில் உணவு நச் சுத்தன்மை என்று கருதப் பட்ட நிலையில், அடுத்த சில மணி நேரங்களி லேயே பாதிப்பு எண்ணி க்கை மின்னல் வேகத்தில் உயர்ந்தது. கப்பல் ஊழிய ர்களில் சிலரும் இதில் பாதிக்கப்பட்டனர்.

கப்பலில் இருந்த மரு த்துவக் குழுவினர் உடன டியாக பரிசோதனை செய்த தில், இது மிக மோசமாக பரவக்கூடிய "நோரோ வைரஸ்" தொற்று என்பது உறுதி செய்யப்பட்டது. பாதி க்கப்பட்ட அனைவருக்கும் கப்பலில் உள்ள தனி அறை களில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்தநிலையில் அலா ஸ்கா மற்றும் கனடாவுக்கு சென்ற "ரூபி பிரின்சஸ்" சொகுசு கப்பலில் திடீரென பரவிய "நோரோவைரஸ்" தொற்று 20 நாள் பயண த்தில் 102 பயணிகள் மற்றும் 23 பணியாளர்கள் என மொத்தம் 125 பேர் வாந்தி, வயிற்றுப்போக் கினால் பாதிக்கப்பட்டுள்ள னர்.

சான் பிரான்சிஸ்கோவில் கப்பல் தனிமைப்படுத் தப்பட்டு கிருமி நீக்கம் செய் யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (நி)

## ...ஹ்ரானுக்கு கொண்டு வரப்பட்ட ...னின் உச்ச தலைவரின் உடல்



...) ... – இஸ்ரேலிய ...தலில் கொல ...ன் உச்ச தலை ...னியின் உடல், ...ச் சடங்கிற்கு ...நேற்று டெஹ் ...ள கிராண்ட் ...கு கொண்டு ...ந் நாட்டு அரசு ...செய்தி வெளி...

... 28 அன்று ... அமெரிக்க- ... போரின் ...த் தாக்குதல் ...ரி கொல்லப் ... இன்று சனிக் ...டபெறவுள்ள அதிகாரப்பூர்வ அஞ்சலி நிகழ்வில், லட்சக்கணக் கான மக்களும் வெளிநாட் டுப் பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இன்று டெஹ்ரானில் தொடங்கும் இறுதி நிகழ்வுக ளில், உலகத் தலைவர்கள், உயர்மட்ட அதிகாரிகள், மதப் பெரியோர்கள் மற்றும் அறிஞர்கள் ஆகியோர் அஞ் சலி செலுத்துவார்கள்.


இறுதிச் சடங்குகள் மற் றும் அடக்கம் செய்யும் நிக ழ்வுகள் நடைபெறவுள்ள டெஹ்ரான் மற்றும் புனித நகரங்களான கோம் மற் றும் மஷ்ஹாத் ஆகிய இடங்களில், இந்நிகழ்வுகளின் போது பொது விடுமுறை அறிவிக்க ப்பட்டுள்ளது.

டெஹ்ரான் வான்வெளி இன்று முதல் பகுதியளவிலும், திங்கட் கிழமையன்று முழுமையாகவும் மூடப்பட்டிருக்கும்.

டெஹ்ரானில் நடைபெறும் சடங் குகளுக்குப் பிறகு, கமேனியின் உடல் ஈராக்கின் புனித நகரங்க ளான நஜஃப் மற்றும் கர்பலாவிற்கு எடுத்துச் செல்லப்படும்.

பின்னர், ஜூலை 9 அன்று, அவரது பிறந்த இடமான ஈரானின் வடகிழக்கு நகரமான மஷ்ஹா த்தில் உள்ள இமாம் ரெசா ஆலயத் தில் அவரது உடல் அடக்கம் செய்ய ப்படும். (நி)

## நியூசிலாந்தில் எல் நினோ
### நிலவுவதாக அறிவிப்பு



(வெலிங்டன்)

நியூசிலாந்து நாட்டில் எல் நினோ நிலவுவதாக அந்நாட்டு அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

அதன்படி, இயற்கை பேரிடர்கள், காலநிலை மாற்றம் மற்றும் கடல்சார் சூழல் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளும் நியூசிலாந்து புவியியல் ஆய்வு நிறுவனம், வரும் மாதங்களில் எல் நினோ நாட்டின் வானி லையைப் பாதிக்கும் என்று கூறியுள்ளது.

மேலும், ஜூலை-செப்ரெம்பர் காலகட்டத்தில் எல் நினோவின் தாக்கம் மிக அதிகமாக இருக்கும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியு ள்ளனர்.

2026-2027 ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் இதன் தாக்கம் உச்சத்தை எட்டும் என்று நியூசிலாந்து புவியியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான எருமை மாடுகள் திருட்டு

## முல்லைத்தீவு குமுழமுனையில் சம்பவம்

(வவுனியா)

முல்லைத்தீவு குமுழமுனை பகுதியில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான எருமை மாடுகள் திருடப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, குமுழமுனை ஆண்டான் குளம் பகுதியில் பட்டியில் கட்டி வைக்கப்பட்டிருந்த சுமார் 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான கிடாரி மாடுகள் மற்றும் பால்குடி மறந்த கன்று மாடுகள் அடையாளம் தெரியாத மாடுகடத்தல் கும்பலால் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் கருத்து தெரிவிக்கையில், தங்களது பகுதியில் தொடர்ச்சியாக மாடுகடத்தல் சம்பவங்கள் இடம் பெற்று வருவதாகவும், கடந்த ஆண்டுகளிலும் 16 மாடுகள் திருடப்பட்ட நிலையில் அது தொடர்பான வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் விசாரணையில் இருப்பதாகவும் தெரி வித்தனர்.

இந்நிலையில், மீண்டும் சுமார் 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான மாடுகள் திருடப்பட்டுள்ளதால் தங்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

மேலும், இரவு நேரங்களில் வாகனங்களில் வரும் மாடுகடத்தல் கும்பல் மிகவும் திட்டமிட்ட மற்றும் சூட்சுமமான முறையில் மாடுகளை கடத்திச் செல்வதாக பண்ணையாளர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இவ்வாறான மாடுதிருட்டு சம்பவங்களால் குமுழமுனை பகுதி பண்ணையாளர்கள் பெரும் பொருளாதார இழப்பை சந்தித்து வருவதுடன், சம்பவத்துடன் தொடர்புடையவர்களை விரைவாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-299)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1985- இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>8இல்செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்-கமம்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17028 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்-பரணி<br>கி.பா -39<br>உயரம்-5'4"<br>தகைமை/தொழில்: BSC,Engineer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/17054 |
| பிறப்பு:1996- இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>உயரம்-5'6"<br>தகைமை/தொழில்- A/L,Machanic<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/17030 | பிறப்பு-2002-இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>12இல்செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L Clerk(pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/17055 |
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்- பூரட்டாதி<br>கி-பா-47<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்-A/L,WORK(Gov)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/17032 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்-புனர்பூசம்<br>உயரம்-5'3"<br>தகைமை/தொழில்: BBA,Master, Audit Officer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/17056 |
| பிறப்பு: 2001- இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-O/L,Business<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/17033 | பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>11இல்சூரிசெவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்-BCOM,Law,MA<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/17057 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>2இல்செவ்<br>கி-பா-41 1/4<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: A/L, கனடா<br>எதிர்பார்ப்பு: படித்தபெண்<br>தொ. இ: B/17036 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>5இல்சூரிசெவ்<br>கி-பா-22 3/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/17060 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 608



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நன்றி மறப்பது நல்லது

ஒரு பெரிய ஆறு. அதைக் கடந்து அடுத்த பக்கம் போகவேண்டும். இந்தப் பக்கம் எட்டுப் பேர் நின்று கொண்டிருந்தார்கள். எட்டுப் பேரும் சேர்ந்து ஒரு குழுவாக வந்திருந்தார்கள். இவர்கள் எல்லாருமே பண்டிதர்கள், குருமார்கள் அதாவது, அறிவாளிகள்.

இவர்கள் எல்லோரும் அந்த ஆற்றைக் கடந்து அடுத்த கரைக்குப் போக வேண்டும். பிறகு அங்கே இருந்து பக்கத்தில் இருக்கின்ற ஒரு ஊருக்குப் போக வேண்டும். கரை ஓரமாக ஒரு படகு கட்டிக் கிடந்தது. அதில் ஏறி உட் கார்ந்தார்கள். அதன் மூலமாக அடுத்த கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே போய்க் கரை ஏறிய உடனே அவர்களுக்குள்ளே ஒரு விவாதம், அறிவாளிகள் அல்லவா? அதனால்.

ஒருத்தர் சொன்னார். இந்தப் படகு நமக்கு உதவி செய்துள்ளது. அது செய்த உதவி நாம் எட்டுப் பேரும் இந்த ஆற்றைக் கடத்து இந்தப் பக்கம் வந்திருக்கிறோம். இது செய்திருக்கிற உதவிக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். பதில் மரியாதை செய்ய வேண்டும். அதை எப்படி செய்வது? அப்படி என்றார்.

இன்னொருத்தர் அதுக்கு ஒரு யோசனை சொன்னார். நமக்கு உதவி செய்த இந்தப் படகுக்கு மரியாதையும் நன்றியும் செலுத்தும் முறையில் அதை நாம் எல்லாரும் நம்மை தலை மேல் சுமந்து செல்வது தான் நியாயம். நம்மை அது சுமந்தது அல்லவா. அதனால் பதிலுக்கு நாம் அதைச் சுமப்பது தான் " சரியான நன்றியாக இருக்கும்!" என்றார். இதுதான் சரியான யோசனை என்று எல்லாரும் ஒப்புக் கொண்டார்கள்.

அவ்வளவுதான். உடனே அந்தப் படகைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு எட்டு பேரும் நடக்க ஆரம்பித்தார்கள். அப்படியே அவர்கள் போக வேண்டிய கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அந்த ஊர் மக்களுக்கு இது வேடிக்கையாக இருந்தது. ஆச்சரியமாக இவர்களைப் பார்த்தார்கள்.

"எதற்காக இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். "படகு என்பது மனிதர்களைக் கரை சேர்க்கத் தானே இருக்கிறது?" நாம் அதை எதற்காகச் சுமக்க வேண்டும். அதை ஆற்றங்கரையிலேயே விட்டு விட்டு வந்திருக்கலாமே?" என்றார்கள்.

அதற்கு இந்த எட்டுப் பேரில் ஒருத்தர் சொன்னார்.

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள். உங்களுக்கு நன்றி உணர்வே கிடையாதா? நீங்கள் நன்றி கெட்டவர்களாக இருக்கிறீர்கள். நாங்கள் நன்றியுடையவர்கள். நன்றியுடைமை என்றால் என்ன வென்று எங்களுக்குத் தெரியும். அதனால் தான் எங்களைக் கரை சேர்த்த படகுக்கு நாங்கள் நன்றி செலுத்துகின்றோம். இந்தப் படகு எப்போதும் எங்கள் மேல் தான் இருக்கும்!" என்றார்கள்.

இது புத்தர் சொன்ன ஒரு கதை. வழி இருக்கு பாருங்கள் அதையே முடிவு என்று நினைத்து வாழ்நாள் முழுவதும் பிடித்துக் கொண்டு மனிதர்கள் துன்பப்படுகிறார்கள் என்பது அவர் கருத்து.

ஒரு மனிதன் ஜெபம் செய்கிறான். வழிபாடு செய்கிறான் அதன் மூலமாக ஒரு விழிப்புணர்வு கிடைத்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்குப்பிறகு எதற்கு அந்த ஜெபமும் வழிபாடும்? தூக்கி எறியவேண்டியது தானே?

ஆனால் மனிதன் அப்படிச் செய்வதில்லை. வழிபாட்டையே இலட்சியமாக வைத்துக் கொண்டு அதைக் கெட்டியாக பிடித்து கொள்வான். அந்த ஜெபத்துக்கு அவன் ஒரு கைதியாக ஆகிவிடுகிறான். அதனால் அதை விட்டு அவனால் வெளியே வர முடிவதில்லை. வழிபாடு மூலமாக சாதித்து விடலாம் என்று நினைப்பது தவறு என்கிறார் ஓஷோ. ஜெபம் என்பது ஒரு முள். காலில் குத்திய முள்ளை எடுக்கறதுக்கு இன்னொரு முள்ளைப் பயன்படுத்துகின்றோம். முள்ளை எடுத்தாச்சு பின்பு என்ன ? இரண்டு முள்ளையும் வீசி எறிந்து விட வேண்டியது தானே?

இரண்டு முள்ளுக்குமே இனிப்பயனில்லை. பழைய முள் இருந்த இடத்திலே புதிய முள்ளைக் குத்தி வைத்தால் வலிதான் தொடரும்... அப்படிச் செய்பவன் முட்டாள். ஆனால் இப்படிப்பட்ட முட்டாள்களுக்கு உலகத்தில் பஞ்சமே இல்லை என்கிறார் அவர்.

அதனால் வழிபாடு, ஜெபம் என்று சொல்கிறோமே அதையெல்லாம் கூட விழிப்புணர்வோடு பயன்படுத்த வேண்டும்.

நம் ஆள் ஒருத்தன் காலில் முள்ளுக் குத்தியதால் இன்னொரு முள்ளாலே அதை எடுத்துக் கொண்டிருந்தான். நிறைய நேரமாக முயற்சி செய்து கொண்டிருந்தான். கடைசியாக அப்பாடா எடுத்தாச்சு என்று சொல்லிவிட்டு மறுபடியும் முள்ளெடுக்க ஆரம்பித்தான்.

என்னப்பா இது... அதுதான் முள்ளை எடுத்துவிட்டாயே பின்பு எதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறாய்? என்று கேட்டார்கள். இதற்கு அவன். ஏற்கனவே எடுத்துவிட்டேன்... தைத்திருந்த முள்ளை எப்பவோ அதை எடுப்பதற்காக உபயோகப்படுத்தின முள் இப்போது உள்ளே மாட்டிக் கொண்டிருக்கிறது. அதனால் மறுபடியும் முதலிலே இருந்து ஆரம்பிக்கிறேன் அப்படி என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கலைஞனின் குரல்

## மாதாந்த பத்திரிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலைஞனின் குரல் மாதாந்த பத்திரிகை வெளியீடு இன்று சனிக்கிழமை மாலை 3.55 மணிக்கு அரியாலை சன சமூக நிலைய DR சிவநேசன் அரங்கில் இடம் பெறவுள்ளது.

கலைஞனின் குரல் ஆசிரியர் இரா. மதிகரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் கனகரட்ணம் சட்டநாதர், கௌரவ விருந்தினராக அரியாலை சனசமூக நிலையத் தலைவர் கி. அதிகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# மணல் ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மணல் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளதென சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (ஸ)

# முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றம், நீதி, வாழ்வாதார மேம்பாடு மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை அன்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், மீன்பிடி மற்றும் கடலியல் வள அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகருக்கும், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகள், உள்ளூர் முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் மற்றும் நல்லிணக்க முயற்சிகளில் ஈடுபடும் தமிழ் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கு மிடையில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, மீள்குடியேற்றம், வீடமைப்பு, வாழ்வாதார மேம்பாடு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பான அரசுத் திட்டங்களை கண்காணிப்பதற்கான சமூக அடிப்படையிலான பொறிமுறையை உருவாக்குதல், அரசாங்கம் மற்றும் சமூக அமைப்புகளுக் கிடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல், திட்டங்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துதல் ஆகிய விடயங்கள் குறித்து கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

அத்துடன் சந்திப்பின் இறுதியில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம், நீதி, அபிவிருத்தி மற்றும் அரசியல் பங்கேற்பு தொடர்பான கோரிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கிய மகஜர் ஒன்று முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகளினால் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 200 | 300 | 200 | 190 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | -- | 220 | -- | 360 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 600 | 550 | 600 | 650 | 850. |
| தக்காளி | 650 | 600 | .400 | 620 | 400 | 500 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 200 | 150 | 240 | 200 | 150 |
| கோவா | 200 | 230 | 300 | 250 | 250 | 220 | 200 |
| கரட் | 400 | 400 | 400 | 380 | 400 | 400 | 350 |
| பூசணி | 140 | 160 | 150 | 100 | 150 | 120 | 120 |
| புடோல் | 140 | 150 | 200 | 200 | 250 | 160 | 300 |
| வாழைக்காய் | 100 | 140 | 100 | 150 | 200 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 400 | 400 | -- | 330 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 200 | -- | 200 | 200 | -- |
| பாகற்காய் | 1400 | 1000 | 1500 | 1400 | 1200 | 1200 | -- |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 250 | 400 | 200 | 270 |
| கருணைக் கிழங்கு | 300 | 320 | 300 | 400 | 400 | -- | 350 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 350 | 300 | 180 | 250 |
| லீக்ஸ் | 400 | 400 | 350 | 350 | 400 | 400 | 280 |
| பீற்றூட் | 350 | 450 | 500 | 400 | 500 | 400 | 500 |
| கறிமிளகாய் | 400 | 500 | 450 | 500 | 450 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 500 | 350 | 500 | 400 | 600 |
| போஞ்சி | 450 | 450 | 600 | 600 | 500 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 200 | -- | 280 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 80 | 60 | -- | 60 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 300 | 450 | 400 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 230 | 100 | 110 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 450 | 400 | 350 | 400 | -- | 300 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 | 300 | 450 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 180 | 200 | 250 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 150 | -- | 60 | -- | 50 |
| வல்லாரை | 50 | 70 | 100 | -- | 100 | -- | 50 |
| ஈரப்பலா | 200 | -- | 100 | -- | 250 | -- | -- |

# இராசிபலன்

04.07.2026
ஆனி 20, சனிக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 10.47 மணி வரை

அவிட்டம் பிற்பகல் 12.27 மணிவரை
சுப நேரம் 2.57-4.27மணிவரை
இராகு காலம் 8.57-10.27 மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்-
பூசம், ஆயிலியம்

வளவன்

**மேஷம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**துலாம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், சுபகாரியச் செய்திகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மகரம்** வார்த்தைகளில் நிதானம் தேவை, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**ரிஷபம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும். பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்

**விருச்சிகம்** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வார்கள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**கும்பம்** கற்பனை மிகுதியான நாள்ள, பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் மகிழச்சி தரும், குடும்பப் பொறுப்புகள் கூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ரோக பயமுண்டு.

**கன்னி** செய்தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம் , சுப காரியங்கள் மேலோங்கும் நாள், தேவையற்ற மனக் குழப்பங்களை தவிர்ப்பது நல்லது, ரோக பயமுண்டு.

உன்னைவிடக் குறைத்து யாரையும் எடை போட்டு விடாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 5

காவியத் தொடர் 1079





இப்போது குந்தவையின் தந்திரம் ஒன்றுமின்றித் தெய்வாதீனமாகவே வானதியின் தீரத்தைச் சோதிக்கும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. சுற்றிலும் வெள்ளம் சூழ்ந்திருக்க, ஓர் ஓட்டுக் கூரையின் மேல் வானதி தொத்திக் கொண்டிருந்தாள். அவள் பயப்படாதிருப்பாளா? ஜோதிடரின் சீடன் படகு கொண்டு வந்து அவளைத் தப்புவிக்கும் வரையில் தைரியத்தைக் கைவிடாது இருப்பாளா? ஆம் இருப்பாள்! சந்தேகமில்லை! இத்தனை காலமும் அளித்து வந்த பயிற்சி இச்சமயம் பயன் படாமலா போய்விடும்?

இவ்விதம் குந்தவை எண்ணமிட்டுக் கொண்டிருந்த போது, ஆழ்வார்க்கடியான், "தாயே! இது என்ன? கூரை நகர்வதாகத் தோன்றுகிறதே?" என்றான்.

"உன் கண்ணிலே ஏதோ கோளாறு! வெள்ளம் நகர்ந்து செல்கிறது; கூரை நகர்வதாகத் தோன்றுகிறது!" என்றாள் குந்தவை.

இப்படிச் சொல்லும் போதே அவளுடைய உள்ளத்திலும் சந்தேகம் உதித்து விட்டது. அதன் அறிகுறி முகத்திலும் காணப்பட்டது. "அம்மா! நன்றாகப் பாருங்கள்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"ஐயோ! இது என்ன விபரீதம்?" என்றாள் இளைய பிராட்டி. "ஜோதிடரே! உம்முடைய சீடன் சீக்கிரம் படகுடன் வருவானா?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"போதும்! போதும்! ஜோதிடரையும் அவருடைய சீடனையும் நம்பியது போதும்! திருமலை! உன்னால் வானதியைக் காப்பாற்ற முடியுமா என்று பார் இல்லாவிட்டால், நானே வெள்ளத்தில் குதிக்க வேண்டியதுதான்! வானதிக்கு ஏதேனும் நேர்ந்துவிட்டால், அப்புறம் நான் ஒரு கணமும் உயிர் வைத்திருக்கமாட்டேன்!" என்றாள்.

"தாயே! அபாயம் நேரும் காலத்திலேதான் நிதானத்தை இழக்கக்கூடாது. இது தங்களுக்கு தெரியாதது அல்ல. கொடும்பாளூர் இளவரசிக்கு உதவி செய்வதற்காக என் உயிரைக் கொடுக்கவும் சித்தமாயிருக்கிறேன் அதனால் பயன் ஏற்பட வேண்டுமே? படகு இல்லாமல் நான் மட்டும் நீந்திச் சென்றால் அந்தக் கூரையில் போய் நானும் தொத்தி ஏறிக் கொள்ளலாம். கொடும்பாளூர் இளவரசியைத் தாங்கும் கூரை என்னையும் சேர்த்துத் தாங்குமா? அல்லது இரண்டு பேரையும் வெள்ளத்தில் அமுக்கிவிட்டுக் கூரையும் கீழே போய்விடுமா? இதைப் பற்றி சிறிது யோசிக்க வேண்டும்."

பூங்குழலியின் சிரிப்புச் சத்தத்தைக் கேட்டு அவளை இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். "இந்த வீர வைஷ்ணவர் யோசித்து முடிப்பதற்குள் கொடும்பாளூர் இளவரசியின் வாழ்க்கை முடிந்துவிடும்!" என்றாள் பூங்குழலி.

"அப்படி நேர்ந்தால் இந்த ஓடக்காரப் பெண் சந்தோஷப்படுவாள்!" என்று ஆழ்வார்க்கடியான் கூறியதும் பூங்குழலியின் முகத்தில் ஆத்திரம் கொதித்தது.

திருமலை மேலும் தொடர்ந்து கூறினான்: "ஆனால், தேவி! அவ்விதம் ஒன்றும் நேரப் போவதில்லை! ஆலிலை மேல் பள்ளி கொண்டு அகிலமெல்லாம் காப்பாற்றும் திருமால், வானதியையும் காப்பாற்றுவார். மச்ச, கூர்ம, வராக அவதாரங்கள் எடுத்து இந்தப் பூவுலகைக் காப்பாற்றிய ஸ்ரீமந்நாராயணன் கொடும்பாளூர் இளவரசியையும் காப்பாற்றுவார்!.. அதோ பாருங்கள்! ஜோதிடர் சீடன் படகுடன் வருகிறான்!"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஓர் எலிக்குடும்பம்



(நேற்றைய தொடர்ச்சி) என்றது சின்னி இகழ்ந்தது மின்னி பக்கத்தில் ஒரு மரவை இருந்தது மஞ்சள் தூள் அதில் நிறையத் தெரிந்தது. மூக்கை நீட்டி மின்னி முகர்ந்தது. நீட்டிய மூக்கில் நிறைந்தது மஞ்சள் தப்பிக் கீழே குதித்தது மின்னி சின்னி துடித்துப் பின்னே விழுந்தது!

மிளகு கவிழ்ந்தது நெடி மிகுந்தது ஆஸ், உஸ் என்று தும்மின விம்மின பூனை ஒன்று மெள்ள வந்தது. தும்மித் துடித்த எலிகளைக் கண்டு பூனையும் உள்ளே பாய்ந்து விசையாய் தடதட என்றே உருண்டன டப்பிகள் தடதட ஓசை கேட்டதும், சிறுவர் மடமட என்று உள்ளே வந்தனர் கண்டு இரண்டும் கலங்கித் திகைத்தன.

அருகில் சிறுவர் நெருங்கி விட்டனர் தா! தூ! என்று தாவிக் கிட்டினர். மின்னியுஞ் சின்னியும் அலறி உருண்டன. உருண்டு சிறுவர் காலில் சிக்கின. மருண்டு அவரும் உதறித் தள்ளினர். அள்ளிச் சுருண்டு அப்பால் விழுந்தன. விழுந்து மூலையில் ஒளிந்த மின்னியைப் பூனை குறியாய் உற்றுத்துப் பார்த்தது மின்னி பதறி ஓட்டம் எடுத்தது.

ஓட்டம் ! ஓட்டம் ! ஒரே ! ஓட்டம்! மின்னி ஒருபுறம் பூனை ஒருபுறம்! சின்னி ஒருபுறம் சிறுவர் ஒருபுறம் ! அச்சம்! அச்சம் ! ஒரே அச்சம்! உடம்பு உதறல் உள்ளம் நடுக்கம்! "செய்வது யாது" என்று தவித்தன. இதற்குள் இரைக்குப் போன எலிகள், வளைக்குள் வந்து குஞ்சுகள் இன்றிப் பதைப்புடன் திரும்பி, இடையிற் பாய்ந்தன.

எதனைப் பிடிப்பது? எதனை விடுவது ! பூனைக்கு ஒன்றும் புரியவில்லை? சிறுவர் இங்கும் அங்கும் துள்ளினர். பூனை திகைத்தது ஒரு நொடிப் பொழுது சிறுவர் திகைத்தனர். மறுநொடிப்பொழுது ஆயினும் எலிக்கு அந்நொடிப் பொழுது "தப்பினோம் பிழைத்தோம்," என்று குஞ்சுகள் தத்தித் தெத்தி வளையுள் நுழைந்ததும் தாயுந் தந்தையும் தொடர்ந்து புகுந்தன.

மின்னியும் சின்னியும் வளையுள் நுழைந்ததும் அஞ்சிப் பதுங்கி ஒதுங்கி நின்றன. தாயும் தந்தையும் சீறி நோக்கின. "பெற்றோர் சொல்லைத் தட்டி நடந்தது குற்றம் குற்றம் பெரிய குற்றம்," என்று குஞ்சுகள் இரண்டும் நடுங்கின, நடுங்கி நின்ற மின்னியைத் தந்தை "ஒடுங்கி உள்ளே இரு என்றால், நீயேன் துணிந்து வெளியே காலை வைத்தாய்? அதிலும் முதலில் அலுமாரி உள்ளே ஆத்திரப்பட்டுப் புகுவது சரியா? பூனை கண்டால் சும்மா விடுமா? ஓடித் தப்ப வகையில்லாமல் வெளியே செல்வது முறையா? சரியா?" என்று சினந்து கடிந்தது குஞ்சுகளை. "இதுவே பாடம் இவ்விரண்டிற்கும் போதும் பட்டது," என்றது தாய் எலி இரண்டும் அதுமுதல் திருந்தி மகிழ்ந்தன.

(முற்றும்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விசாரணைகளின் தீவிரம் மன ஆறுதலைத் தருகிறது

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் அரசாங்கம் மிகவும் உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவது மனதிற்கு ஆறுதல் தருவதாக உள்ளது.

ஆம், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இந்த நாட்டில் நடந்த மிகவும் ஈனத்தனமான கொடுஞ்செயல்.

எனினும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் கடந்த கால ஆட்சியாளர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அதேநேரம் இந்த நாட்டில் எவரும் எதிர்பாராத அளவில் ஆட்சி மாற்றம் இடம்பெற்றதெனில், அதற்கு மூல காரணம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் எதிர்விளைவேயாம்.

ஆம், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்த போது, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

இத்தாக்குதல் இடம்பெற்றதன் பிற்பாடு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால், அவர் ஜனாதிபதியாகிய போதிலும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இங்குதான் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் திசை திருப்பங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

ஆயினும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னணியைத் தென்பகுதி மக்கள் அறிந்த போது, தென்னிலங்கை முழுமையிலும் மக்கள் புரட்சி வெடித்தது.

ஜனாதிபதி மாளிகையை மக்கள் முற்றுகையிடுகின்றனர். ஆட்சித் தரப்பினர் மற்றும் ஊழல் புரிந்த அரசியல்வாதிகளைத் தேடித் தேடி மக்கள் திரிகின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவின் தந்தையார் ராஜபக்ஷவின் சிலை பாகுபலி படத்தில் நடந்தது போல இழுத்து விழுத்தப்படுகிறது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி மாளிகையில் இருந்து தப்பி ஓடுகிறார்.

இந்த நிலைமைகள் ஏற்படுவதற்கு ஒட்டுமொத்தக் காரணமும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இதே நேரம் கோட்டாபயவுக்குப் பின்னர் இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமனம் பெறுகிறார். பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்பதற்கான வியூகங்களை அவர் வகுத்தாராயினும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பிலான விசாரணைகள் மந்தமாகவே இருந்தன.

இங்கு தான் அடுத்த ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவைத் தெரிவு செய்தால், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகள் தப்பி விடுவார்கள் என மக்கள் கருதுகின்றனர். மக்களின் அந்தக் கருத்து நிலை அநுர குமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக்குகிறது.

இப்போது ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் குறித்த விசாரணைகள் மன ஆறுதலைத் தரும் வகையில், முன்னேற்றகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த இடத்தில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சிலர் கூப்பாடு போடுகின்றனர். ஆனால், அவை எதுவும் எடுபடப்போவதில்லை என்பதுடன் இந்த நேரத்தில் – இது விடயத்தில் தமிழ்த் தரப்புகள் அரசுக்கு உற்ற ஆதரவாக இருப்பதும் மிகவும் அவசியம்.

# பிள்ளைகள் போதைக்கு அடிமையாவதைத் தடுக்க பெற்றோரின் கரங்களில் சோதனைக் கருவிகள்

## சாத்தியக்கூறுகளை ஆராய்கிறது அரசாங்கம்

(கொழும்பு)

போதைப்பொருளுக்கு எதிரான தனது தேசியப் பிரசாரத்தின் ஒரு பகுதியாக, தங்கள் பிள்ளைகள் போதைப் பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனரா? என்பதைப் பெற்றோர்கள் தனிப்பட்ட முறையில் பரிசோதித்து அறிய உதவும் வகையிலான போதைப்பொருள் பரிசோதனைக் கருவிகளைச் சந்தையில் அறிமுகப்படுத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில ஜனாதிபதி செயலகத்தில்,

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் அண்மையில் நடைபெற்ற போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பது தொடர்பான 'முழு நாடும் ஒன்றாக' தேசியச் செயற்றிட்டக் குழுக் கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன் இளம் தலைமுறையினரை இலக்கு வைக்கும் போதைப்பொருள் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்காக பாடசாலைகளில் போதைப்பொருள் விழிப்புணர்வுத் திட்டங்களை மேலும் விரிவுபடுத்துதல்.

பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருள் பயன்பாடு குறித்து நாடு தழுவிய ரீதியில் விசேட கணக்கெடுப்பு ஒன்றை அறிமுகப் படுத்துதல்.

போதைக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு சேவைகளை மாவட்ட மட்டத்தில் மேம்படுத்துதல் உள்ளிட்ட பல முக்கிய முடிவுகள் இக்கூட்டத்தின் போது எட்டப்பட்டுள்ளன.

உயர்மட்டக் கலந்துரையாடல்களின் பின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்குத் தாங்களே தனிப்பட்ட முறையில் போதைப்பொருள் பரிசோதனைகளை மேற்கொள்ள ஏதுவாக, மருந்தகங்கள் வாயிலாக இந்தப் பரிசோதனைக் கருவிகள் வழங்கநடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

# ஒரு நாட்டின் நீதித்துறை சீர்குலைந்தால் நாடு குறுகிய காலத்திற்குள் அழிந்துவிடும்

## பிரதம நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன

இயற்கைச் சீற்றங்களினால் மட்டுமல்லாமல் ஒரு நாட்டின் நீதித்துறை சீர்குலைவதனாலும் அந்த நாடு மிகக் குறுகிய காலத்திற்குள் முழுமையாக அழிந்து விடக் கூடும் என பிரதம நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன எச்சரித்துள்ளார்.

இலங்கை நீதிபதிகள் நிறுவனத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட நீதிவான்களுக்கான பயிற்சிப் பட்டறையில் முதன்மை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

நீதித்துறை சீர்குலைவதனால் ஒரு நாட்டிற்கு ஏற்படும் அழிவு என்பது கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மிக மோசமானதாக இருக்கும்.

அவ்வாறானதொரு துரதிர்ஷ்டவசமான நிலை நாட்டில் ஏற்பட்டால், எந்தவொரு சர்வதேச நன்கொடையாளராலோ அல்லது வெளிநாட்டு நிதி உதவியினாலோகூட அந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது.

நாட்டின் இறையாண்மையின் பிரதான தூணாக விளங்கும் நீதித்துறை அதிகாரம் என்பது நீதிச்சேவை ஆணைக்குழுவினாலோ அல்லது தனிப்பட்ட வேறு தரப்பினராலோ வழங்கப்படுவது அல்ல. நீதி அதிகாரம் என்பது முழுமையாக மக்களுக்கே சொந்தமானது.

நீதித்துறையின் சுதந்திரம் என்பது வெறும் அரசியலமைப்பினால் மட்டும் திடீரென வழங்கப்பட்ட ஒன்றல்ல. அது தலைமுறை தலைமுறையாக மக்களிடம் இருந்து கைமாறி வந்த ஒரு அருவமான பாரம்பரியம் ஆகும். அரசியலமைப்பு என்பது அந்தப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு சட்டக்கட்டமைப்பை மாத்திரமே வழங்குகிறது.

பொதுமக்கள் நீதித்துறையின் மீது வைத்துள்ள நம்பிக்கையையும் நன்மதிப்பையும் எவ்வித களங்கமும் இன்றிப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு நீதித்துறை அதிகாரியினதும் முதற்பொறுப்பு என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ம-7)

# வீதியில் இயர்போன் பாவனைக்கு முற்றுப்புள்ளி இட்ட பொலிஸார்

ஹெட்போன் அல்லது இயர்போன் அணிந்து வீதிகளில் நடந்து செல்லும் பாதசாரிகளுக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இதுதொடர்பாக போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது இயர்போன் அணிந்து வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகளுக்கு எச்சரிக்கை மட்டுமே விடுக்கப்பட்டு வருகிறது. எனினும், வீதி விபத்துக்களின் அபாயம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் எதிர்காலத்தில் இவ்வாறு செயற்படும் மற்றும் விதிகளை மீறும் பாதசாரிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ம-7)

# மக்களின் காணிகளை இராணுவம் சுவீகரிக்க ஒருபோதும் அனுமதியோம்

## பச்சிலைப்பள்ளி தவிசாளர் சுரேன்

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இராணுவ தேவைக்கு பொது மக்களுக்கு சொந்தமான எந்தக் காணிகளும் சுவீகரிக்க அனுமதிக்கப் போவதில்லை என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று(3) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது பச்சிலைப்பள்ளி முகாவில் கிராம அலுவலர் பிரிவில் உள்ள தனியார் காணியினை 4 வது மின் மற்றும் இயந்திரப் பொறியியல் படையணிக்காக சுவீகரிப்பதற்காகவும் இயக்கச்சி எரிபொருள் நிலையத்துக்கு அருகில் உள்ள 12 ஏக்கர் தனியார் காணியினை சுவீகரிப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த கோரிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்த பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் இராணுவ தேவைக்காக இந்தக் காணிகளை சுவீகரிக்க முடியர்து. இது முழுக்க முழுக்க பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் இந்தக் காணிகளை இராணுவ தேவைகளுக்கு வழங்க முடியாது. அந்த காணி உரிமையாளர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து இருக்கிறார்கள். எனவே அந்தக் காணிகளை உரியவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றார். (ம-7,315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரங்களின் உள்ளார்ந்த சூழலியல் வாழ்க்கை

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

நாம் சாதாரணமாக மரங்களை அசைவற்ற . பதிலளிக்காத உயிரினங்களாக கருதி வருகிறோம். அவை நம்மிடம் பேசுவதில்லை ஆயினும் ஒன்றுடனொன்று தொடர்பு கொள்கின்றன மனிதர்களைப் போல மரங்கள் மிகவும் செறிந்து காணப்படுகின்ற காடுகள் ஒரு பெரிய உயிரியல் சமூகமாக செயற்படுகின்றன.


ஆரம்ப காலங்களில் மனிதர்கள் மரங்களை தமது பயன்பாட்டு தேவைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தி இருந்தாலும் அவற்றுக்குள் மிகச் சிக்கலான, புத்தி சாதுர்யமான ஒரு அதிசய உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அண்மைய விஞ்ஞான ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

குறிப்பாக மரங்கள் செறிந்து காணப்படும் காடுகளில் நம் கண்களுக்கு புலப்படாமல் ஒரு விந்தை மிகு உலகம் செயற்பட்டு வருகிறது. நம்மைப் போலவே தாவரங்களும் உணர்கின்றன. பதிலளிக்கின்றன. ஒன்றுக்கொன்று தகவல்களை பரிமாறுகின்றன.

சாதாரணமாக இலை பூச்சியொன்றினால் உட்கொள்ளப்படும் போது / தொற்றுக்குள்ளாகும் போது அந்தக் குறிப்பிட்ட பகுதியில் உள்ள இழையம் உடனே மாற்றமடைகிறது. அந்த இழையங்கள் உடனடியாக சமிக்ஞைகளை அனுப்புகின்றன.

மனிதர்களில் உருவாக்கப்படும் சமிக்ஞைகள் மிக வேகமாக பரவும் அதேவேளையில் மரங்களில் இவை நிமிடத்திற்கு மூன்றில் ஒரு அங்குலம் என்ற மிக மெதுவான வேகத்தில் பயணிக்கின்றன. எனவே உருவாக்கப்படும் பாதுகாப்பு இரசாயனச் சேர்வைகள் (Tannins, alkaloids, Phenolic compounds) மீண்டும் இலைகளை வந்தடைந்து பூச்சிக்கு எதிராக தொழிற்படுவதற்கு குறைந்தது ஒரு மணி நேரம் ஆகிறது. அபாயம் இருந்தாலும் மரங்கள் மிகவும் மெதுவான வாழ்க்கைக் கோலத்தில் தான் செயற்படுகின்றன.

இருப்பினும் அவை தமது உடலின் பகுதிகளில் என்ன நடக்கிறது என்பதை அறியாமல் இருப்பதில்லை. குறிப்பாக வேர்களில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் உடனே செய்தி மரம் முழுவதற்கும் அனுப்பப்படுகிறது. இதனால் இலைகளில் குறிப்பிட்ட இரசாயன சேர்வைகளை உற்பத்தி செய்ய தூண்டப்படுகிறது.



இதே போன்று மரங்களினால் அபாயம் உணரப்படும் போது ஒன்றுக்கொன்று எச்சரிக்கைகளை பரிமாறுகின்றன. குறிப்பாக மரமொன்று விலங்குகளினால் உணவாக்கிக் கொள்ளப்படும் போது தமது நிலைத் தன்மையை உணர்ந்து நச்சுப்பொருட்களை அதிகளவில் இலைகளில் உற்பத்தி செய்கின்றன.

இதன் மூலம் நுகரிகளை விரட்டியடிக்கின்றன. இதுமட்டுமல்லாது உடனடியாக அச்செய்தியை அருகிலுள்ள மரங்களிடமும் பரிமாறுகின்றன. இதற்காக குறிப்பிட்ட சில மரங்கள் எதலீனை (Volatile Organic Compounds) எச்சரிக்கை வாயுவாக வெளியிடுகின்றன. இந்த எச்சரிக்கை சமிக்ஞை காற்றின் மூலம் பரவுகிறது.

எச்சரிக்கையை பெற்ற அனைத்து மரங்களும் இலைகளில் நச்சுப் பொருட்களை உற்பத்தி செய்து பாதுகாப்புக்கு தயாராகின்றன. இவை மட்டுமல்லாது மரங்கள் ஒன்றுக்கொன்று எச்சரிக்கையை அனுப்புவதற்கு வேர்களின் முனைகளை சுற்றி இருக்கும் பங்கசு (Fungus) ஊடாக அனுப்பப்படும் இரசாயன சமிக்ஞைகளின் மூலமும் தகவல்களை பகிர்கின்றன.

காடுகளில் மரங்கள் தனியாக வாழ்வதில்லை. அவை வேர்கள் மற்றும் பூஞ்சண வலையமைப்புக்கள் (Wood Wide web) மூலம் ஒன்றுடனொன்று இணைந்து ஒரு சமூகமாக செயற்படுகின்றன. இதன் மூலம் உணவு, தகவல் மற்றும் எச்சரிக்கைகள் பரிமாறப்படுகின்றன

பழைமையான, பெரிய மரங்கள் இளம் நாற்றுக்களுக்கு மற்றும் பலவீனமான மரங்களுக்கு ஊட்டச்சத்து, நிழல், பாதுகாப்பு என்பவற்றை அளிக்கின்றன. இவை காடுகளின் நிலைதகு தன்மையை பேணுகிறது. மற்றும் ஒருமுறை வறட்சி, பூச்சி தாக்குதலை எதிர்கொண்ட மரங்கள் மீண்டும் அந்நிலை ஏற்படும் போது வேகமாக பதிலளிக்கின்றன என்பதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. மரங்கள் பூச்சிகள், பறவைகள், விலங்குகள், நுண்ணுயிர்கள் போன்ற பல உயிரினங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கின்றன.

இத்தகைய தகவல் பரிமாற்றங்கள் மரங்களை பாதுகாப்பதோடு மட்டுமல்லாது , ஒரு முழுக் காடு தனது ஆரோக்கியத்தை பேணிக் கொள்ளவும், வறட்சி, பூச்சித் தாக்குதல், காலநிலை மாற்றம் போன்ற வெளிப்புற சவால்களுக்கு ஒருங்கிணைந்த முறையில் பதிலளிக்கவும் உதவுகின்றன.

மேலும் இந்த இணைப்பு வலையமைப்புகள் மண்வளத்தையும் நீர் சுழற்சியையும் பாதுகாக்கின்றன. மரங்கள் என்பது உணர்வுகள், தொடர்புகள் மற்றும் பாதுகாப்பு முறைமைகள் கொண்ட உயிரினங்கள் ஆகும். காடுகளை பாதுகாப்பது என்பது மரங்களை மட்டுமல்ல அவற்றின் உள்ளார்ந்த தொடர்பியல் அமைப்புக்களையும் பாதுகாப்பதற்கும் எதிர்கால தலைமுறையினருக்கான உயிரியல் சமநிலையை உறுதிப் படுத்துவதற்கும் அத்தியாவசியமானதொன்றாகும்.

**தர்சனா உதயமூர்த்தி,**
**உதவி விரிவுரையாளர்**
**தாவரவியல் துறை**
**யாழ்ப்பாணப்**
**பல்கலைக்கழகம்**

## பள்ளத்தில் பாய்ந்த பேருந்து
# 40 பேர் உயிரிழப்பு
### பாகிஸ்தானில் துயர சம்பவம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தென் மேற்குப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை அதிகளவான பயணிகளுடன் பயணித்த பேருந்து ஒன்று, அதிவேக நெடுஞ்சாலையிலிருந்து பாறைகள் நிறைந்த பள்ளத்தாக்கினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 40 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 8 பேர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பேருந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பலுசிஸ்தான் அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த பேருந்தில் அதிகமான பயணிகள் பயணித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மோசமான வீதிக் கட்டமைப்பு, போக்குவரத்துச் சட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்படாமை மற்றும் ஆபத்தான முறையில் வாகனங்களைச் செலுத்துதல் போன்ற காரணங்களால் பாகிஸ்தானில், குறிப்பாக மலைப்பாங்கான பகுதிகளில் இவ்வாறான விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவித்துள்ளன. (நி)

# நியூசிலாந்து செல்கிறார் இந்தியப் பிரதமர் மோடி

(டில்லி)

அடுத்த வாரம் நியூசிலாந்துக்கு பிரதமர் மோடி பயணம் மேற்கொள்கிறார். அப்போது இந்தியா- நியூசிலாந்து இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: இந்தியப் பிரதமர் மோடி அடுத்த வாரம் நியூசிலாந்திற்குத் தனது முதல் அதிகாரப்பூர்வப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியா உலகின் மிகப் பெரிய மற்றும் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளில் ஒன்றாகும் மேலும் நியூசிலாந்தின் பொருளாதார செழிப்பிற்கு மிகவும் முக்கியமான நாடாகவும் அது திகழ்கிறது.

ஏப்ரல் மாதம் கையெழுத்தான நியூசிலாந்து-இந்தியா இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளுக்கு இடையிலான உறவு வலுவடைந்தது.

இந்த ஒப்பந்தம் நியூசிலாந்திற்கு அதிக வேலை வாய்ப்புகள், ஏற்றுமதி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும். இது 140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்திய சந்தையில் ஏற்றுமதியை அதிகரிக்கப் புதிய வாய்ப்புகளை உருவாகும் இதன் மூலம் நியூசிலாந்து சமூகங்களுக்கு அதிக வருவாய் கிடைப்பதோடு. வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு ஊதியமும் உயரும் என கிறிஸ்டோபர் லக்சன் தெரிவித்தார் . (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சமையல்...

முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளன.

அதன்படி 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 300 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய 4765 ரூபாயாகக் காணப்பட்ட 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 4465 ரூபாய் ஆகும்.

அதேபோல் 1910 ரூபாவாக நிலவிய 5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 118 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 1792 ரூபாவாகும்.

890 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட 2.3 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 55 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 835 ரூபாவாகும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும் லாஃப்ஸ் 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 1280 ரூபாவால் குறைக்க அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய 6245 ரூபாயாக காணப்பட்ட 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 4965 ரூபாய் ஆகும்.

அதேபோல், 2500 ரூபாவாக நிலவிய 5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 512 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 1988 ரூபாவாகும். (ம-7)

## பாராளுமன்றம்...

25 மற்றும் 26ஆம் திகதிகளில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற அமர்வு வாரத்திற்கான அலுவல்கள் பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டன.

பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ள புதன்கிழமை தவிர பாராளுமன்றம் கூடும் ஏனைய சகல தினங்களிலும், மு.ப 9.30 மணி முதல் 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மு.ப 10.00 மணி முதல் மு.ப 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காகவும் மு.ப 11.00 மணி முதல் மு.ப 11.30 மணிவரை நிலையியற் கட்டளை 27(2)ன் கீழான கேள்விக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## வசந்த...

கப்பட்டுள்ளார்.

நேற்று காலை 10.05 மணியளவில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் வளாகத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ, கடற்படையின் நிறைவேற்று அதிகாரி பதவிக்குரிய அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருக்காத நிலையில் விதிகளை மீறி அவர் அந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரிலேயே வசந்த கரன்னாகொட கைது செய்யப்பட்டார்.

அத்துடன் கடற்படையின் நிலையான ஆட்சேர்ப்பு நடைமுறைகளைப் புறந்தள்ளி, பிரித்தானியாவின் றோயல் கடற்படைக் கல்லூரியில் யோஷித ராஜபக்ஷ பயிற்சி பெறுவதற்காக அரச நிதி பயன்படுத்தப்பட்டது என்றும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு குற்றம் சுமத்தியிருந்தது.

இந்த முறைகேடான செயற்பாடுகள் அனைத்தும் இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுவதாகச் சுட்டிக் காட்டிய ஆணைக்குழு, கைது செய்யப்பட்ட வசந்த கரன்னாகொடவை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று மாலை ஆஜர்படுத்தியது.

இதன்போது இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் சந்தேகநபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணிகளின் சமர்ப்பிப்புகளைப் பரிசீலித்த கொழும்பு பிரதம நீதிவான் அசங்க எஸ். போதரகம, வசந்த கரன்னாகொடவைப் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இந்த விவகாரம் தொடர்பில் யோஷித ராஜபக்ஷ ஏற்கெனவே கடந்த ஜூன் 17ஆம் திகதி கைது செய்யப்பட்டுப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வலி.வடக்கில்...

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும் அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்புத் தரப்பினர் வெளியேறாத நிலையில் அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையிலும் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

இத்தகைய சூழலில் தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதென காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்தனர்.

அதற்கமைய தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி நேற்று 11 ஆவது வெள்ளிக்கிழமையும் காணி உரிமையாளர்களால் அமைதி வழியில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.(ம-7)

## ஈழத்துச்...

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் திண்ணபுரம் ஸ்ரீ சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மகா கும்பாபிசேகம் நாளை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் 6.45 மணியில் உள்ள சுப வேளையில் இடம்பெறும்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகத்தில் பங்கேற்பதற்காக தமிழகத்தில் இருந்து தருமை ஆதீனம் ஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக சுவாமிகள், செங்கோல் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், பேரூர் சுவாமிகள் ஆதீனம் திருப்பெருந் திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், வேளாக்குறிச்சி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான மகாதேவ சுவாமிகள், பழனி ஆதீனம் தவத்திரு சாது சண்முக அடிகளார், தென்சேரி மலை ஆதீனம் தவத்திரு முத்து சிவராம சதி அடிகளார், தருமை ஆதீனத்தின் கொக்கலிங்க தம்பிரான் சுவாமிகள் மற்றும் ஸ்ரீமத் திருஞானசம்பந்தர் சுவாமிகள் ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

இவர்களுடன் ஓதுவார் பத்மஸ்ரீ திருத்தணி சுவாமிநாதன் அவர்களும் வருகை தரவுள்ளனர். (ந)

## பலாலி...

அம்மன் சிலையானது எங்கிருந்து வந்தது என்பது தொடர்பிலான தகவல் எதுவும் வெளியாகவில்லை.

நீண்ட நாட்கள் கடலுக்குள் இருந்ததால் சிலையின் சில பகுதிகளில் கடல் பாசிகளும் படிவங்களும் காணப்படுகின்றன.

அம்மன் சிலை கரையொதுங்கிய தகவலறிந்து சம்பவ இடத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் திரண்டுள்ளனர். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127













































Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.04.1947

மறைவு
17.06.2014

### அமரர் சிற்றம்பலம் சின்னத்தம்பி

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)

திதி : 04.07.2026

ஆறிரண்டு ஆண்டுகள் ஆகினவோ
இவ் விழுதுகள் தம் வேரிழந்து!
நேரிய வழி நடந்து உம் சீரிய பண்புகளை
இப்பாரினில் விட்டுச் சென்றீர்...
காரிருள் படர்ந்த காலமதில்
கண்ணீரில் நனைந்த தேசமதில்
மண்ணுலகப் பணி செய்தீர்...

நிலம் வியக்க இங்கு
நிறை வாழ்வு வாழ்ந்தவரே
ஆண்டுகள் நீண்டாலும்
ஆறாது எம் துயரம்
இந்நிலம் இருக்கும்வரை
உங்கள் நினைவிருக்கும்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

வரணி (7981) குடும்பத்தினர்

# இணையவழி பண மோசடி இளைஞர் ஒருவர் கைது

(கொழும்பு)

இணையவழி ஊடாக எளிதாகப் பணம் சம்பாதிக்க முடியும் எனக் கூறி, சுமார் 43 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய வடமேற்கு மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறித்த இளைஞரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் பேஸ்புக் மற்றும் ரெலிகிராம் மூலம் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி குறித்த மோசடியில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகள் வாயிலாக கண்டறியப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து வடமேற்கு மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர். (ம-7)


### அறை வாடகைக்கு உண்டு

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் இராமநாதன் வீதியில், இணைந்த குளியலறையுடன் கூடிய அறை ஒன்று (அனெக்ஸ்) வாடகைக்கு உண்டு. மாணவிகள் / வேலை செய்யும் பெண்களுக்கு மட்டும் வழங்கப்படும். (7975)

தொடர்பு - 077 208 7778

### பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்

வதந்திகளும் அரசியல் நிகழ்ச்சிநிரல்களும்
உங்களை பயன்படுத்த விடாதீர்கள். வெறுப்புப்
பேச்சு பெரும்பாலும் வதந்திகள்,
தவறான தகவல்கள் மற்றும் சமூகங்களைப்
பிரிக்க முயலும் அரசியல் நோக்கங்களால்
இயக்கப்படுகிறது.

ஏதேனும் தகவலை பகிர்வதற்கு முன்
உங்களையே கேளுங்கள்:
இதை யார் உருவாக்கினர்? ஏன் உருவாக்கினர்?
இதனால் யாருக்கு பயன்?

பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள்.
அமைதியைத் தெரிவு செய்யுங்கள்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால் ஐ.நா இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வழங்கப்படுகிறது. (7775)


## மரண அறிவித்தல்



பிறப்பு
19 - 11 - 1953

இறப்பு
30 - 06 - 2026

### சுபத்திரா கிங்ஸ்லி சத்தியநாதன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுபத்திரா கிங்ஸ்லி சத்தியநாதன் அவர்கள் திருநெல்வேலி இல்லத்தில் கடந்த 30.06.2026 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் கிங்ஸ்லி சத்தியநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும் பெலிசியா பிரிந்தினி (UK), கிரிஸ்ரி பிரசாந் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற வனஜா மற்றும் விஜிதா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிறிஸ்ரோ (Uk), தேவகுமாரி (UK) ஆகியோரின் மாமியாரும் ரிஷோன், சேயோன், கிரிஷா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (05.07.2026) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4 மணியளவில் கோப்பாய் இராசபாதையிலுள்ள உரும்பிராய் இம்மானுவேல் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

120/1, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (7974)

தகவல் : குடும்பத்தினர்
077 874 8267, 074 010 6595

## மரண அறிவித்தல்



அன்னை மடியில்
1939 - 01 - 08

இறைவன் அடியில்
2026 - 07 - 03

### நாகலிங்கம் சின்னையா

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நாகலிங்கம் சின்னையா அவர்கள் நேற்று (03.07.2026) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற லோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்றவர்களான அழகம்மா, துரைசிங்கம், செல்வச் சிரஞ்சீவி, அரியமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மணிவண்ணன் (இத்தாலி), மதனராசன் (ஆசிரியர் - யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்), மனோகரன் (கண்ணன்) ஆகியோரின் நேசமிகு தந்தையும் சாந்தினி, சிவாஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மதுஷா, தர்சனா, மதுசூதனன், டயானந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (05.07.2026) ஞாயிற்றுக்கிழமை கரந்தன், நீர்வேலியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் மு.ப 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 10 மணியளவில் சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கரந்தன்,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி. (7973)

தகவல் : குடும்பத்தினர்
077 418 6860

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media